Registered as a Newspaper in Ceylon

விலை சத 10

ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மில்க்வைற் சோப்

விலை விபரம்	ரூ. ச.
288 கட்டி போட்ட 1 பெட். விலை	52-00
144 கட்டி „ 1 „	26-00
72 „ „ 1 பார்சல் „	13-00
1 டசின் விலை	2-25
1 கட்டியின் விலை	22
பார் சோப் 1 பெட்டி 50 போட்டது	60-00
„ 1 டசின் விலை	15-00
„ 1 பார் சோப் விலை	1-30

10 பெட்டிக்கு மேல் எடுப்பவர்களுக்கு பெட்டிக்கு ரூ. 1/- கழிவு கொடுக்கப்படும்

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 26 ஆம் நாள் துல்க பிறை 5 (9 3 65) செவ்வாய்க்கிழமை இதழ் 29

தேர்தல் தினத்தில் முப்படைகளின் சேவை

காவல் வேலைகளுக்கு கடற்படை, ராணுவம்

கொள்ளுப்பிட்டி, திங்கள்

தேர்தல் தினத்தையொட்டி இரண்டு மூன்று தினங்களுக்கு பொலிசாரின் வேலைகள் சில இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தெகிவளை மிருகக் காட்சிச்சாலை, மத்திய வங்கி ஆகிய இடங்களைப் பாதுகாவல் செய்யும் வேலை இராணுவச் சிப்பாய்களிடமும் மந்திரிகளின் வாசஸ்தலங்கள், சுப்ரீம் கோர்ட் நீதியரசர்களின் இல்லங்கள் ஆகியவற்றைக் காவல் புரியும் வேலைகள் கடற்படையினரிடமும், பாராளுமன்ற அங்கத்தவர்களின் விடுதியான 'சிராவஸ்தி', கூட்டுறவு மொத்தஸ்தாபனம், கும்பனித் தெரு தடுப்புக்காவல் முகாம் ஆகியவைகளைக் காவல் செய்யும் பொறுப்பு விமானப்படையினரிடமும் ஒப்படைக்கப்படவுள்ளது.

தேர்தல் தினத்தன்று நாடெங்குமுள்ள முக்கிய நகரங்களில் பத்தொன்பது ஆயுதந்தாங்கிய பொலிஸ் படைப் பிரிவுகள் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நிறுத்தப்படவிருக்கின்றன. இதற்கான உத்தரவுகளை பொலிஸ் அதிபர் பிறப்பித்துள்ளார்.

19 ஆயுதந்தாங்கிய பொலிஸ் படைப் பிரிவுகளில் ஒவ்வொன்றும் ஒரு இன்ஸ்பெக்டரையும் ஒரு சார்ஜன்டையும் ஐந்து கான்ஸ்டபிள்களையும் கொண்டிருக்கும்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, காலி, அம்பலாங்கொடை, மாத்தறை, களுத்துறை, கம்பகா, மிரிஹானை, கண்டி, நுவரெலியா, அனுராதபுரம், சிலாபம், அவிசாவளை, குருநாகல், கேகாலை, பொலனறுவை, இரத்தினபுரி, பதுளை ஆகிய இடங்களில் இந்த பொலிஸ் பிரிவுகள் நகரத்துக்கு ஒன்றாக நிறுத்தப்படும்.

மொனராகலை அம்பாந்தோட்டை, புத்தளம், ஆகிய இடங்கள் தவிர்ந்த இதர வாக்குக் கணக்கெடுப்பு நிலையங்கள் அனைத்தும் பொலிஸ் வானொலி இணைப்பு மூலம் கொழும்பு தலைமைக்காரியாலயத்துடன் தொடர்புகொண்டிருக்கும்.

"காவலிலுள்ள கம்யூனிஸ்டுகளை விடுதலை செய்யவேண்டும்"

கேரளதேர்தல் முடிவையடுத்து பூபேஷ்குப்தா கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 8

கேரள சட்டசபைத் தேர்தலில் வெற்றியீட்டிய இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களான 29 பேரையும் விடுதலை செய்யுமாறு இந்திய அரசாங்கத்தை இன்று டில்லி மேல் சபையில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு பூபேஷ் குப்தா கேட்டுக்கொண்டார்.

தடுப்புக்காவலில் உள்ள இவர்களை விடுதலை செய்யாவிட்டால் கேரளத்தில் அரசாங்கம் அமைப்பதற்கு தடை செய்யும் குற்றச்சாட்டுக்கு அரசாங்கம் ஆளாகவேண்டிவரும் என்று பூபேஷ்குப்தா கூறினார்.

இது சம்பந்தமாகத் தாம் விரைவில் ஒரு கவன ஈர்ப்புப் பிரேரணை கொண்டுவரவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

உள்துறை மந்திரி திரு குல்சாரிலால் நந்தா இதற்குப் பதிலளிக்கையில் கவன ஈர்ப்புப் பிரேரணை கொண்டு வரும்பொழுது தாம் இது பற்றி விபரமாகப் பதிலளிப்பதாகத் தெரிவித்தார். சென்ற பொதுத் தேர்தலில் இடதுசாரி வலதுசாரி கம்யூனிஸ்டுகள் எல்லாம் சேர்ந்து கேரளத்தில் 41 4 புள்ளிகள் வாக்குகளைப் பெற்றனரென்றும் இம்முறை கம்யூனிஸ்டுகள் 29 5 புள்ளி வாக்குகளே பெற்றுள்ளனர் என்பதைமட்டும் சுட்டிக்காட்ட விரும்புவதாகவும் திரு குப்தா தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்ததாக இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் பலர் இந்திய முழுவதிலும் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

"சூறவளி நிதியை சமமாகப்பங்கிடவும்"

பிரதமருக்கு வவுனியா பட்டினசபை கோரிக்கை

வவுனியா, திங்கள்

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஆரம்பித்த அரசாங்க சூறாவளிக் கஷ்ட நிவாரண நிதிக்கு வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் கிடைத்த உதவிப்பணத்தையும் பொருள்களையும் சூறாவளியால் பாதிக்கப்பட்ட வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் திருக்கோணமலை ஆகிய இடங்களுக்குப் பாகுபாடின்றி பகிர்ந்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று வவுனியாப் பட்டினசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

இத் தீர்மானத்தை ஜனாப் பீ. எஸ். அப்துல்லா கொண்டுவந்தார். தீர்மானத்தின் பிரதிகள் சமூகசேவை மந்திரிக்கும் சமூகசேவை இலாகா டைரக்டருக்கும் அனுப்பிவைப்பதென முடிவுசெய்யப்பட்டது.

பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. ம. பொன்னையா தலைமையில் நடைபெற்றது. வவுனியா நகர வீதிகளைத் திருத்துவதற்கு ஐம்பதாயிரம் ரூபாய் ஒதுக்கப்படவேண்டுமென்ற தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

சாஸ்திரி மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

புதுடில்லி, மார்ச் 8

கேரளத் தேர்தல் முடிவுகளை யடுத்து இந்திய உள்துறை அமைச்சர் திரு. குல்சாரிலால் நந்தாவை ராஜினாமாச் செய்யும்படி கோருவதற்கு இந்திய எதிர்க்கட்சித் தலைவர்கள் யோசனை செய்து வருகின்றதாகக் கூறப்படுகிறது.

பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் மந்திரி சபையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு பிரஜா சோஷலிஸ கட்சியினர் முயற்சிசெய்து வருவதாகவும் தெரியவருகிறது.

சிறுமி மரணம்

சாவகச்சேரி, திங்கள்

மட்டுவிலைச் சேர்ந்த பரமு என்பவரின் ஒன்பது வயது மகள் சரோஜா என்ற சிறுமி தனது வீட்டுக் கிணற்றில் தண்ணீர் அள்ளுகையில் தவறி விழுந்து மரணமானார்.

ஈழநாடு சூறவளி கஷ்டநிவாரண நிதி

மெசேர்ஸ் பியத் இன்ரநஷனல் லிமிட்டட்—உள்ளூர் ஏஜன்ட் லுவிஸ்பிறவுண் கம்பெனி மூலம் திரு டேவிட் செல்வரத்தினம் ரூ 220-80 பெறுமதியான 48 டின் எஸ். எம். ஏ. பாலுணவை 'ஈழநாடு' சூறவளி நிதிக்கு வழங்கியுள்ளார்.

இதுவரை 'ஈழநாடு' சூறவளி கஷ்டநிவாரண நிதிக்கு பணமாகவும் பொருளாகவும் ரூ 27,011-01சதம் சேர்ந்துள்ளது.

'விவசாயத்துக்கு ஊக்கமளித்தால் சுயதேவைப் பூர்த்திகிடைக்கும்'

வவுனியா, திங்கள்

"கமச்செய்கையை பெரும் முக்கிய தொழிலாக நான் கொண்டுள்ளேன். ஆகையால் அதன் அபிவிருத்தியே என் முதற் கடமையாக இருக்கும். கமக்காரருக்கு அரசாங்கம் வேண்டிய உதவிகள் யாவையும் செய்து நல்லமுறையில் வழிகாட்டி ஊக்குவித்தால் இந்நாட்டு மக்களுக்குத் தேவையான நெல் முழுவதையும் சிறிய கால எல்லையில் உற்பத்தி செய்யலாம் என்பது என் பூரண நம்பிக்கை. இன்றைய நிலையில் கமக்காரர் படும் கஷ்டங்களை நான் நேரில் பார்த்துள்ளேன். இந்த மாவட்டத்தில் உப உணவு உற்பத்தியைப் பல மடங்கு கூட்டலாம்"

இவ்வாறு வவுனியா நகர மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற கூட்டத்தில் சுயேட்சை அபேட்சகர் திரு சதா ஸ்ரீநிவாசன் பேசுகையில் கூறினார்.

திரு. ஸ்ரீநிவாசனை ஆதரிக்கு முகமாக நடைபெற்ற இக் கூட்டத்திற்கு திரு. முதலியார் சின்னத்தம்பி தலைமை வகித்தார். திரு. ஸ்ரீநிவாசன் மேலும் கூறியதாவது -

சமூக நல்வாழ்வு என்னும் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன சாசனத்திற் கண்ட தனிமனிதனின் ஜீவாதார உரிமைகளைப் பாதிக்காதவாறும் ஜனநாயக ஆட்சியைப் பாதிக்காதவாறும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும். அண்மையில் நம் அரசு மேற்கொண்ட மிக ஆபத்தான முயற்சிகள் ஜனநாயக ஆட்சியைக் குழிதோண்டிப் புதைத்து சர்வாதிகார ஆட்சியை மக்கள் மேல் திணிக்கும் நேர்முக மறைமுகச் சூழ்ச்சியென்பது யாவருக்கும் புலனாகிவிட்டது. இந்த ஆபத்து அதிர்ஷ்டவசமாகத் தற்காலிகமாக நீங்கியிருந்த போதிலும், மறுமுறையும் இதுபோன்ற பேராபத்துத் தலைதூக்காவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டியது இத் தேர்தலில் வாக்காளராக இருக்கும் பெருமக்களின் தலையாய கடன். இக்காரணத்தினால் இத் தேர்தல் நமது நாட்டின் சரித்திரத்தில் மிக முக்கியமானதும் வாய்ந்ததாகும்.

வேலையற்றோர் தொகை பன்மடங்கு பெருகிவிட்டது. அரசாங்க உத்தியோக மோகம்

(6-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

யாவும் நமது ஊர். யாவரும் நமது கேளிர். நன்மை தீமை நாம் தரவருவன. பிறரலன்றி யாவும் திருவருளென்பது நன்கறிவேம்.

—யோகசுவாமிகள்.

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil
Daily. Post Box 49, Jaffna.
Telegrams: 'EELA NADU' Jaffna
Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
மாசி மீ 26 உ (9-3-65)

இலங்கையின் நடுநிலைமை

புதுசீனத்துடனே இலங்கை அரசாங்கம் செய்துகொண்டுள்ளதாக சில கொழும்புப் பத்திரிகைகளில் வெளியான ஒரு ரகசிய கப்பல் ஒப்பந்த விவரங்கள் இலங்கைப் பொதுமக்களிடையே சில சந்தேகங்களையும் கவலையையும் ஏற்படுத்துவதாகவுள்ளன.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது உண்மைதானா? பத்திரிகைகளில் வெளியான விவரங்கள் சரியா? அப்படியாயின் இலங்கை கடைப்பிடித்துவரும் நடுநிலைமை மத்திய வழிக்கொள்கையை இது பாதியாதா என்ற முக்கிய கேள்விகள் எழுகின்றன. இது உண்மையல்லாவிடில் உடன் இதை அரசாங்கம் மறுக்க வேண்டும். உண்மையாயின் இதுபற்றி எழுந்துள்ள சந்தேகங்களை விளக்கவும், நடுநிலைமைக்கொள்கை தளர்த்தப்படவில்லை என்பதுபற்றிய விவரமான அறிக்கையை அது உடன் வெளியிடக் கடமைப்பட்டுள்ளது.

பத்திரிகையில் வெளியான செய்தியின்படி, இலங்கையிலுள்ள எல்லாத் துறைமுகங்களையும் புதசீனக் கொடியுடன் வரும் எல்லாக் கப்பல்களும் பயன்படுத்தலாமாம். இந்தியா உள்ளிட்டு வேறுஎந்த நாட்டுக்கும் இல்லாத இந்தச் சலுகையை புதுசீனக் கப்பல்களுக்கு இலங்கை அளிக்க வேண்டிய காரணமோ அவசியமோ என்ன? சீன யுத்தக் கப்பல்களோ அல்லது ஆயுதம் தாங்கிய கப்பல்களோ நம் துறைமுகங்களைத் தடையின்றி உபயோகிக்க இந்த ஒப்பந்தம் அனுமதிக்கிறதா? இந்தச்சலுகை வேறு வல்லரசுகளுக்கு அளிக்கப்பட்டுள்ளதா? அளிக்கப்பட்டிருப்பின் அதை அரசாங்கம் எடுத்துச்சொல்ல வேண்டும். இல்லையாயின் இந்தஏற்பாடு நமது நடுநிலைமைக்கொள்கையை பாதிப்பதாகாதா?

புதுசீனத்திடம் கடற்படை இல்லை என்றும், ஆகவே சீன யுத்தக்கப்பல்கள் எதுவும் இங்கு நமது துறைமுகங்களை உபயோகிக்கக்கூடிய சந்தர்ப்பமே இராதென்றும் ஒரு தேர்தல் கூட்டத்தில் சமாதானம் கூறப்பட்டதாகத் தெரிகிறது. உலகிலேயே பெரிய வல்லரசுகளுள் ஒன்றாக எழுந்துவரும் புதுச்சீனத்திடம் சிறிய அளவிலாவது ஒரு கடற்படை இல்லாமலிராது. அப்படி இதுவரை இல்லாமலிருப்பினும் அது கடற்படையை அமைத்துக்கொள்ளுவது அசாத்தியமன்று. அணுகுண்டு வெடித்துள்ள புதுச்சீனம் கடற்படையைப் பலப்படுத்தாமல் இருக்குமென்று நம்புவதற்கில்லை.

நமது நடுநிலைமைக் கொள்கையையும் பாதுகாப்பையும் பாதிக்கக்கூடிய இவ்வித ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் செய்துகொள்ளவேண்டிய அவசியம் என்ன? இதற்குப் பதிலாக சீனம் நமக்கு விசேஷ உதவிகள் ஏதும் அளித்துள்ளதா? இதுவரை சீனம் நமக்கு அளித்துள்ள ரயில்பெட்டிகள் முதலிய உதவிகளுக்கு இந்த விசேஷ சலுகைதான் காரணமா? அப்படியாயின் இந்த உதவிகள் நிபந்தனையுடன் கூடியதாகவும், பிறநாடுகளுடன் நமது உறவைப பாதிப்பதாகவும் இராதா? இதுபற்றிய உண்மை நிலையை பிரதமர் ஸ்ரீமா விளக்கி விரிவான அறிக்கையை வெளியிடுவதுடன் புதிய பார்லிமெண்டில் இந்த முக்கிய விஷயம் விவாதத்துக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

பொதுத்தேர்தலும் அரசியல் கட்சிகளும் 2

பெண் அபேட்சகர்களும் நேரடிப் போட்டியும்

இந்தப் பொதுத் தேர்தலில் 12 பெண்கள் போட்டியிடுகிறார்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் நான்கு பெண்மணிகள் போட்டியிடுகின்றனர். திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, திருமதி குமாரி இலங்கரத்ன, திருமதி ஜெ. பி. ஒபயசேகரா, திருமதி சேமா விக்கிரமநாயக்கா. ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் மூன்று பெண்மணிகள் போட்டியிடுகின்றனர். சீபாட்டி சுகந்தாடி பொன்சேகா, திருமதி சிதா செனிவரத்தினி, திருமதி விமலா கன்னங்கரா. லங்கா சமசமாஜ கட்சியின் சார்பில் திருமதி விவியன் குணவர்த்தனவும், திருமதி குசலா அபயவர்த்தனவும் போட்டியிடுகின்றனர். திருமதி குசும ராஜரத்தின ஜாதிக விமுக்திப் பெரமுன சார்பிலும் திருமதி குசும குணவர்தன மகாஜன எக்சத் பெரமுன சார்பிலும் போட்டியிடுகின்றனர்.

திரு. சி. பி. டி' சில்வாவினால் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கட்சியின் சார்பில் திருமதி சிறியலதா இரத்திநாயகா போட்டியிடுகிறார். ஒன்றிற்கு மேற்பட்ட அங்கத்தவர்களை அனுப்பும் தொகுதி ஐந்து உள்ளன. அவையாவன கொழும்பு மத்திய தொகுதி (3 அங்கத்தவர்கள்), கொழும்பு வடக்கு (2 அங்கத்தவர்கள்), மட்டக்களப்பு (2 அங்கத்தவர்கள்), மூதூர் (2 அங்கத்தவர்கள்), அக்குறனை (2 அங்கத்தவர்கள்).

நாலு தம்பதிகள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். திரு. சி. பி இலங்கரத்னவும் மனைவியும், திரு லெஸ்லி குணவர்த்தனவும் மனைவியும், திரு கே எம் பி ராஜரத்தினவும் மனைவியும் திரு பிலிப் குணவர்தனவும் மனைவியும் எதிர்வரும் தேர்தலில் 80 தொகுதிகளில் நேரடிப் போட்டிகள் நிகழவிருக்கின்றனர்.

வடமாகாணத்தில் சாவகச்சேரி, ஊர்காவற்றுறைத் தொகுதிகளிலேயே நேரடியாக அபேட்சகர்கள் போட்டியிடுகிறார்கள். இத்தொகுதிகளில் தமிழ் காங்கிரஸ கட்சியும்—தமிழரசுக் கட்சியுமே நேரடியாகப் போட்டியிடுகின்றது. 1947-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் சாவகச்சேரித் தொகுதியில் திரு வி குமாரசாமி தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு தனது எதிர் அபேட்சகரான திரு ஆர் தம்பையாவை 9811 அதிகப்படியான வாக்குகள் பெற்றுத் தோற்கடித்தார் 1952-ம் ஆண்டின் பொதுத் தேர்தலின் போதும் திரு வி குமாரசாமிக்கும் திரு எஸ் அருணசலத்திற்கும் இத்தொகுதியில் நேரடிப் போட்டியே நடைபெற்றது. 1956-ம் ஆண்டிலும் திரு குமாரசாமிக்கும் திரு வி என நவரத்தினத்தற்கும் நேரடிப் போட்டியே நடைபெற்றது. மார்ச் 1960-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் திருவாளர்கள் வி என் நவரத்தினம், வி குமாரசாமி, ஏ எஸ கனரத்தினம் ஆகியோர் போட்டியிட்டனர். ஜூலை 1930-ம் ஆண்டுத் தேர்தலின் போது திரு வி என் நவரத்தினம் தமிழரசுக் கட்சி சார்பிலும் திரு கே திருவியநாயகம் தமிழ்க் காங்கிரஸ சார்பிலும் போட்டியிட்டனர். திரு வி என் நவரத்தினம் முதன் முறையாக 1956 ஆண்டிலேயே பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டு அண்மையில் பாராளுமன்றம் கலைக்கப்படும்வரை அங்கத்தவராய் இருந்திருக்கின்றார்: தற்பொழுது இவருடன் திரு எம் சிவானந்தன் தமிழ்க் காங்கிரஸ சார்பில் போட்டியிடுகின்றார். பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் தொகை 80,451. இத்தொகுதியில் உள்ளூராட்சி மன்றங்கள் உள்ள இடங்கள்- நாவற்குளி, சாவகச்சேரி, கச்சாய், மிருசுவில், வறணி, இனப்பிரிவு: இலங் தமிழர்கள், 98.7 வீதம் கீழ் நாட்டுச் சிங்களவர் .3 வீதம், கண்டிச் சிங்களவர் .1 வீதம், இலங்கை சோனகர் '4 வீதம், பிறஇனத்தவர் .5 வீதம்

ஊர்காவற்றுறை தொகுதியில் 1947-ம் ஆண்டுத் தேர்தலின் போது ஐந்து அபேட்சகர்கள் போட்டியிட்டனர். அப்பொழுது சுயேச்சையாகப் போட்டியிட்ட திரு. அல்பிரட் தம்பிஐயா 332 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார். திருவாளர்கள் ஏ. பி குலசிங்கம், சே. அம்பலவாணர், சேர் வைத்திலிங்கம் துரைசாமி, ஜே. சி. அமரசிங்கம் ஆகியோரும் 1947-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பங்குபற்றினர். 1952-ம் ஆண்டுத் தேர்தலிலும் திரு. அல்பிரட் தம்பிஐயாவே வெற்றி பெற்றார் அவருடன் அப்பொழுது திருவாளர்கள் ஏ. தியாகராசா, சி. பாலசிங்கம், வி. நவரத்தினம், எஸ. சேனாதிராசா ஆகியோர் போட்டியிட்டனர் 1956-ம் ஆண்டில் திரு தம்பிஐயா சுயேச்சையாகவும், திரு வி ஏ கந்தையா தமிழரசுக்கட்சி சார்பிலும் போட்டியிட்டு திரு கந்தையா வெற்றி பெற்றார் மார்ச் 1960-ம் ஆண்டுத் தேர்தலில் திருவாளர்கள் வி ஏ கந்தையா, ஏ தம்பிஐயா வி வி நல்லைதம்பி ஆகியோர் போட்டியிட்டனர் ஜூலை 1960-ம் ஆண்டு தேர்தலில் திருவாளர்கள் வி ஏ கந்தையாவும் திரு எஸ சேனாதிராசாவும் போட்டியிட்டனர் திரு வி. ஏ கந்தையா இறந்தபின்னர் செப்டம்பர் 1963-ம் ஆண்டு நடைபெற்ற இடைக்கால தேர்தலின் போது திருவாளர்கள் வி நவரத்தினமும், ஏ ஜி இரா சூரியரும் போட்டியிட்டனர் அப்பொழுது தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட திரு வி. நவரத்தினம் பாராளுமன்ற அங்கத்தவராக தெரிவுசெய்யப்பட்டார். தற்பொழுது நடக்கவிருக்கும் பொதுத்தேர்தலில் திரு. என் ரி சிவஞானம் இவருடன் தமிழ்க்காங்கிரஸ சார்பில் போட்டியிடுகின்றார் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் தொகை 31,785 இத்தொகுதியில் உள்ளூராட்சி மன்றங்கள் உள்ள இடங்கள் நெடுந்தீவு கிராமசபை, புங்குடுதீவு, அனலைதீவு காரைநகர், அல்லைப்பிட்டி, வேலணை, இனப்பிரிவு இலங்கைத் தமிழர்கள் 98.8 விகிதம், கீழ்நாட்டுச் சிங்களவர் .2 விகிதம், கண்டிச் சிங்களவர் .4 விகிதம், இலங்கைச் சோனகர் .2 விகிதம், பிறஇனத்தவர் 4 விகிதம்.

“3 வருடத்தில் கங்கையை திருப்பாவிடில் ராஜினமா?”

அபேட்சகர் வாக்குறுதி

மீசாலை, திங்கள்

“கடந்த இருபது வருட காலமாக இலங்கை முழுவதும் தமிழ் அந்தஸ்துகோரி வந்த ஒரே ஒரு கட்சி தமிழ்க் காங்கிரஸ்தான், இனிமேலும் தொடர்ந்து சமஅந்தஸ்திற்கே போராடி வருவோம், அன்றும் இன்றும் என்றும் சமஅந்தஸ்து என்ற ஒரே கொள்கைக்காகஉழைத்து44-ம் ஆண்டுமுதல், 56-ம் ஆண்டு வரை இந்நாட்டில் சமஅந்தஸ்தை நிலைநிறுத்திவந்துள்ளோம்.”

சங்கத்தானையில் நேற்றிரவு நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ அபேட்சகர் திரு எம் சிவானந்தன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார் டாக்டர் தாமோதரம்பிள்ளை தலைமைவகித்தார்.

கிளிநொச்சி தொகுதி தமிழ் காங்கிரஸ அபேட்சகர் திரு வி. குமாரசாமி பேசும்போது கூறியதாவது:

வருடாவருடம் நூற்றுக் கணக்கான வாலிபர்கள், பாடசாலையிலிருந்து வெளியேறி வேலையின்றி தவிக்கின்றார்கள் தமிழ்மொழி கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டுவருகிறது. தமிழ்க் காங்கிரஸ பெரும்பான்மையாக பாராளுமன்றத்தில் இருந்தபொழுது நாடெங்கும் தமிழுக்கு சமஅந்தஸது இருந்தது.

மகாவலி கங்கையை வட மூலம்தான் இப்பகுதியை முன்னேற்ற முடியும். மூன்று வருடகாலத்தில் நான் மகாவலி கங்கையை வடமாகாணத்திற்கு திருப்பாவிடில், ராஜினமா செய்துவிட்டு திரும்புவேன். குடியேற்றத் திட்டங்கள்மூலம் கிளிநொச்சி தொகுதியில் மூன்று புதிய தொகுதிகளை ஏற்படுத்தி பாராளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகளை அதிகரிக்கச் செய்வேன்

திரு. என். சிவநேசன் உடுவில் தமிழ்க்காங்கிரஸ அபேட்சகர் பேசும்போது பாராளுமன்றத்தில் நமது சமஅந்தஸது கொள்கையை தெளிவாக எடுத்துக்கூறியே நமது இழந்த உரிமைகளை பெற முடியுமென்று கூறினார்.

திருவாளர்கள் ஸ்ரீதரன், எஸ, துரைராசா, நூர்மகமது, விக்கிரமசிங்கம், எஸ, சே. செல்லையா மற்றும் பலரும் பேசினார்கள்.

வவனியாவில் திருட்டு

வவனியா, திங்கள்

வவனியா உள்வட்ட வீதியில் உள்ள திரு. ஆரியவன்சா என்பவரின் வீட்டில் இரவு நேரத்தில் கள்வர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளார்கள். இவரின் வீட்டில் இருந்து நகைகள், உடுப்புப்பெட்டி,

கள் திருட்டுப்போய்விட்டதாக பொலிஸில் புகார்செய்யப்பட்

ஐயாறன்

எழுதுவது

யாழ்ப்பாணத்திலே இலங்கை இந்தியர் சங்கம் சென்ற இரண்டுவருட காலமாக நல்லமுறையில் இயங்கிவந்தது. அதில் இப்போது பிளவு ஏற்பட்டு, இருதரப்பினரும் பொலிஸவரை சென்றுள்ளதாகவும், சங்கக் காரியாலயத்தில் இரு பூட்டுகள் பூட்டப்பட்டிருப்பதாகவும் அறிய மிக வருத்தமாகவும் ஏமாற்றமாகவுமிருந்தது.

பல்லாண்டுகளாக சட்டப்படி இங்கே வசித்துவந்த இந்தியத் தமிழர் பலரது விடுகளில் திடீர் திடீரென இரவிலே வந்து சோதனைபோட்டு, குடும்பம் குடும்பமாகப் பொலிஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் பலவித இம்சைகளுக்கும் உட்படுத்தி வந்தபோதுதான், இந்தச் சங்கம் ஏற்பட்டு, நல்ல தொண்டு செய்தது. இந்திய ஹைகமிஷனுடன் தொடர்பு கொண்டு, இந்தியர்களுக்குப் பாஸபோர்ட் பெற்றுத் தரவும் உதவியது. இச்சங்கம் ஏற்பட்டபின், பொலிஸ இம்சைகள் வெகுவாகக் குறைந்து, அந்த எளிய குடும்பங்கள் சற்றே நிம்மதியாக வாழவும் முடிந்தது.

இங்கு ஆரம்பித்த இலங்கை-இந்திய நட்புறவுச் சங்கம் முளையிலேயே கொல்லப்பட்டுவிட்டிருக்கையில், இந்த இலங்கை இந்திய சங்கம் உயிருடன் இரண்டு வருடங்கள் இருந்து நல்ல பணி செய்து வந்தது பெரிய காரியம், ஆனால் அச்சங்கத்துக்கும் திருஷ்டி வந்துவிட்டது போலும்.

* * *

பதவி விஷயமாகவே சங்கத்தில் தகராறு ஏற்பட்டுள்ளதாகவும் ஓர் அன்பர் மூலம் அறிந்தேன். இந்தச் சங்கத்தில் மட்டுமல்ல, எல்லாச் சங்கங்களிலும் இந்த மண்டைப்பிடியுண்டு. தொண்டமான், அஸீஸ இவ்விரு தலைவர்களுக்குள்ளும் வேற்றுமை ஏற்பட்டு அந்த பெரிய ஸதாபனம் இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸஎன்றும்ஜனநாயகதொழிலாளர் காங்கிரஸ என்றும் இரண்டாகியுள்ளது, அது போல் இந்தச்சிறிய சங்கமும் இரண்டாவதாயின், அது இம்மக்களுக்கு பெருமையோ, உதவியோ அளிக்க முடியாது.

மற்ற ஆசைகளைப்போல் பதவி ஆசை நீங்குவதென்பது கலைமல்ல. ஒன்றுபட்டால்தான் உண்டு வாழ்வு. ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வுதான். இது ஓர் தெய்விகத் தொண்டாகும். மக்கள் பணிதானே மகேசுவரன் பணி. அவ்வித தொண்டு மனப்பான்மையுடன், அடக்கத்துடன் இருசாரினரும் பொது நன்மையைக் கருதி விட்டுக்கொடுத்தால், இச்சங்கம் மீண்டும் தலைதூக்கி முன்னினும் அதிக தொண்டுகளைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

* * *

வருந்தான்காண் மனமுருகி நினையாதார்க்கு வஞ்சகன்காண் அஞ்செழுத்து நினைவார்க்கென்றும், மருந்தவன்காண் வான்பிணிகள் தீருவண்ணம் வானகமும் மண்ணகமும் மற்றுமாகிப், பரந்தவன்காண் பட்சடையெட்டுடையான்தான்காண் பங்கயத்தோன் தன் சிரத்தைபேத்தியூர், இரந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சிஏகம்பன்காண் அவனென் எண்ணத்தானே.

—அப்பர்சுவாமிகள்.

இஸ்ரேலுடன் ராஜீய உறவை ஏற்படுத்த முடிவு

மேற்கு ஜெர்மன் தீர்மானம்

பொன், மார்ச் 8

இஸ்ரேலுடன் ராஜீய உறவை ஏற்படுத்திக்கொள்வதென்றும் ஐக்கிய அரபுக் குடியரசுடன் தொடர்ந்து ராஜீய உறவை வைத்துக்கொள்வதென்றும் மேற்கு ஜெர்மன் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கிழக்கு ஜெர்மன் பிரதமர் திரு. வுல்பிரைட் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு விஜயம் செய்து ஜனாதிபதி நாஸருடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து ஐக்கிய அரபுக் குடியரசுடன் ராஜீய உறவைத் துண்டித்துக்கொள்ள வேண்டுமென்று மேற்கு ஜெர்மன் மந்திரி சபையில் அபிப்பிராயம் தோன்றியது. இதனால் மந்திரிசபையில் நெருக்கடியும் ஏற்பட்டது.

கிழக்கு ஜெர்மனியை சர்வதேச அந்தஸ்துக்கு உயர்த்த ஐக்கிய அரபுக் குடியரசு முயற்சி செய்யாதவரை அதனுடன் ராஜீய உறவைத்தொடர்ந்து வைத்துக்கொள்வதென்று மேற்கு ஜெர்மன் மந்திரிசபை நேற்று முடிவு செய்தது. இஸரேலுடன் ராஜீய உறவை ஏற்படுத்துவதன் மூலம் அரபு நாடுகளுக்கு ஆத்திரமூட்டும் நோக்கம் எதுவும் மேற்கு ஜெர்மன் அரசாங்கத்துக்குக் கிடையாது என்றும் மேற்கு ஜெர்மன் மந்திரிசபை தீர்மானித்தது.

தென்வியட்நாமுக்கு மேலும் இரு அமெரிக்க கடற்படை அணி

தாக்கப்பட்டால் திருப்பித் தாக்கும்

என்கிறார் ரஸ்க்

சைகோன், மார்ச் 8

தென்வியட்நாமில் வடவியட்நாம் எல்லைக்கு 175 மைல் தூரத்தில் உள்ள அமெரிக்க விமானத் தளத்துக்கு மேலும் 3500 அமெரிக்க கடற்படைச் சிப்பாய்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

இரண்டு அமெரிக்க ராணுவ அணிகளைச் சேர்ந்த 3500 துருப்புக்களும் பிக்மாங் தளத்தில் தென்வியட்நாம் துருப்புக்களின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அவர்களை விடுவிப்பார்கள். தென்வியட்நாம் அரசாங்கத்தின் கோரிக்கை மீதே அமெரிக்கத் துருப்புக்கள் வந்துள்ளதாக தென்வியட்நாம் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமெரிக்க வெளிவிவகார மந்திரி திரு டீன் றஸ்க் நேற்று வாஷிங்டனில் டெலிவிஷன் நிகழ்ச்சியொன்றில் அளித்த பேட்டியில் தென் வியட்நாமுக்கு மேலும் இரு அமெரிக்க கடற்படை அணிகள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதை உத்தியோகரீதியில் தெரிவித்து அவைகள் தென்வியட்நாமில் உள்ள அமெரிக்கத் தளங்களைப் பாதுகாக்கவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார். வியட்காங் கொரில்லாக்களை எதிர்த்து இந்த அணிகள் சண்டையிடமாட்டாதென்றும் ஆனால் அவர்கள் தாக்கப்பட்டால் திருப்பித் தாக்குவார்களென்றும் திரு. ரஸ்க் தெரிவித்தார்.

வியட்நாம் பிரச்னையை அமைதி வழியில் தீர்க்க வேண்டுமென்பதே தங்களது விருப்பமென்றும் ஆனால் அண்டைநாடுகளில் அமைதியைப் பாதுகாக்கவும் தலையிடாமலிருக்கவும் ஹனோயும் பீக்கிங்கும் இதுவரை எவ்வித அறிகுறியையும்காட்டவில்லையென்றும் திரு. ரஸ்க் கூறினார்.

"தமிழ்நாட்டு முதன்மந்திரி ராஜினமாச் செய்யவேண்டும்"

தமிழரசு தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்

தென்னிந்தியாவில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செய்யும் அனுதாபத் தீர்மானங்கள் நாயன்மார்கட்டு இராஜேஸ்வரி கோவில் மைதானத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன தீர்மானங்கள் வருமாறு:-

இலங்கையிலே சிங்கள அரசாங்கம் கொண்டுவந்த தனிச் சிங்களச்சட்டத்தை தம்முடைய பேச்சால் மூச்சால் செய்த தியாகங்களால் இதுவரை தடுத்து நிறுத்தியிருக்கும் தமிழரசு இயக்கம்போல இந்தியாவில் டில்லி அரசாங்கம் கொண்டுவந்த இந்திச் சட்டத்தை பேச்சால் மூச்சால் பெரும் போராட்டங்களினால் தடுத்து நிறுத்தி ஆட்சிமொழிச் சட்டத்தையும் ஓரளவுக்கு திருத்துமளவிற்கு வெற்றிபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இலங்கைவாழ் தமிழினத்தின் சார்பில் நமது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை மூன்று வாரங்கள் தொடர்ச்சியாக நடத்திவெற்றிபெற்ற மாணவமணிகளுக்கு மறத்தமிழர் சமுதாயத்திற்கு மனமுவந்த பாராட்டுகள் உரியது. உயிர்நீத்த தியாகிகளின் குடும்பங்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபம் உரியது.

பிறந்தநாட்டில் தமிழ் மக்களுக்கு சொல்லொணாக் கஷ்டங்களுக்கு உள்ளாக்கிய தமிழ்நாட்டு முதன்மந்திரி திரு. எம். பக்தவத்சலம் உடனடியாகத் தமது பதவியை ராஜினாமாச் செய்யவேண்டும்.

கண்ணீர்புகைப் பிரயோகம்

மொண்ட்கோமரி, மார்ச் 8

அலபாமாராஜ்யத்தின் தலைநகரான மொண்ட்கோமரிக்கு சிவில் உரிமை பவனிசெல்ல முயன்ற அமெரிக்க நீக்ரோக்களின் ஊர்வலத்தைக் கலைக்க அலபாமா பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர்,

வில்சன்—எர்ஹார்ட் சந்திப்பு

பொன, மார்ச் 8

மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் எர்ஹார்ட்டுடன் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் இன்று சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தார்.

சம்ஸ்கிருத மொழி அபிவிருத்தி

புதுடில்லி, மார்ச 7

சமஸ்கிருத மொழி அபிவிருத்தி சம்பந்தமாக நியமிக்கப்பட்ட கமிஷன் செய்துள்ள சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஷோம்பே குற்றச்சாட்டு

நைரோபி, மார்ச் 8

காங்கோவில் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஐக்கிய அரபுக்குடியரசும் அல்ஜீரியாவும் உதவி புரிகின்றனவென்பதற்குத் தம்மிடம் தஸ்தாவேஜுகளுடன் ஆதாரம் இருக்கிறதென்று காங்கோ பிரதமர் ஷோம்பே நைரோபியில் ஆபிரிக்க சயூனியன் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்,

சீன - பாக். கூட்டறிக்கை

பீக்கிங், மார்ச் 8

பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜுல்பிகார் அலிபுட்டோவும் சீனவெளிவிவகார மந்திரி மார்ஷல் சென்-யீ-யும் நேற்று விடுத்த கூட்டறிக்கையில் சீன-பாகிஸ்தான் நட்புறவு வளர்ச்சியடைந்துள்ளதில் திருப்திதெரிவித்துள்ளனர்.

உலகநிலைமை பற்றிக் கூட்டறிக்கையில் குறிப்பிடுகையில் ஐ நா. மாற்றியமைக்கப்படவேண்டும் எனக்கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன-இந்திய எல்லைப் பிரச்னை பேச்சுவார்த்தை மூலம் விரைவில் தீர்க்கப்படுமென கூட்டறிக்கை நம்பிக்கை தெரிவிக்கிறது

சீன-பாகிஸ்தான் எல்லைகள் வரையறுக்கப்பட்டு விட்டதாகவும் விரைவில் எல்லை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்றும் கூட்டறிக்கை கூறுகிறது!

எரி பொருள் உபத்தி

புதுடில்லி, மார்ச் 8

ராக்கெட்டுகளை இயக்குவதற்கான எரிபொருள்களை உற்பத்திசெய்யும் இரண்டு ஆலைகள் தென்னிந்தியாவில் விரைவில் நிறுவப்படவிருக்கின்றன,

சீன அதிபருக்கு அழைப்பு

பீக்கிங், மார்ச் 8

சீன மக்கள் குடியரசின் அதிபர் லீ-ஷா-சீயை பாகிஸ்தானுக்கு விஜயம்செய்யுமாறு சீனாவுக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பை சீன அதிபர் ஏற்றுக் கொண்டார்.

மலேசிய பிரதமர் புகார்

சிங்கப்பூர், மார்ச் 8

மலேசியாவுக்கு எதிரான சதி நடவடிக்கைகளுக்கென ஹாங்காங்கில் பல்வேறு வங்கிகளில் சீனா பதினேழரைக் கோடி பவுன் நிதி ஒதுக்கி வைத்துள்ளது என்று மலேசியப் பிரதமர் துங்குஅப்துல் ரஹ்மான் இங்கு ஒரு கூட்டத்தில் கூறினார்.

திரு. துங்குவின் 62 வது பிறந்ததினத்தை யொட்டி மலேசிய—இந்திய நட்புறவுச் சங்கம் பிரதமருக்கு ஒரு உபசாரமளித்தது. இவ்வைபவத்தில் சங்கத்தின் சார்பாக மலேசிய தேசிய நிதிக்கென சங்கத் தலைவர் திரு. ஜேக்கப் துங்குவின் பிறந்தநாள் பரிசாக பணமுடிப்பொன்றை வழங்கினார்.

படகு விபத்து

கர்நூல் மார்ச் 8

கர்நூருக்கு அருகில் துங்கபத்திரா நதியில் இருதினங்களுக்கு முன் நிகழ்ந்த ஒரு படகு விபத்தில் மாண்டவர்களில் 18 பேர்களின் சடலங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. மேலும் 29 பேர்களின் சடலங்கள் தேடப்பட்டு வருகின்றன.

"தமக்கென தமிழர் ஓர் அரசை நிறுவ வேண்டியது அவசியம்"

தேர்தல் கூட்டத்தில் டாக்டர் நாகநாதன்

யாழ்ப்பாணம், செவ்வாய்

'தமிழ்ப் பேசும் மக்கள் தமக்கு என ஓர் சுயநிர்ணய அரசை ஏற்படுத்தாவிடின் எதிர்காலத்தில் தமிழ்க் குழந்தைகள் அடிமைகளாக வாழ நேரிடும், சமாதானம், சுபீட்சம், முன்னேற்றம் என்பனவற்றிற்கு தமிழர்களின் ஆதரவு தேவை என்பதனைச் சிங்கள மக்கள் உணரச் செய்தது தமிழரசுக் கட்சியே' என்று டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் நாயன்மார்கட்டில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

நல்லூர்த் தொகுதியில் தமிழரசு அபேட்சகர் டாக்டர் ஈ எம். வி. நாகநாதனையும் கோப்பாய் தொகுதி தமிழரசு அபேட்சகர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளையையும் ஆதரிக்குமுகமாக நாயன்மார்கட்டு இராஜேஸ்வரி அம்பாள் ஆலய மைதானத்தில் திரு இ. சரவணமுத்து தலைமையில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தொடர்ந்து பேசியதாவது;-

ஒற்றையாட்சித் திட்டமே தமிழருக்கு விமோசனம் தரக்கூடியது எனத் தமிழ்க் காங்கிரஸ் கூறிவருகிறது. ஒற்றையாட்சித் திட்டத்தினால் சிறுபான்மையினர் அழிந்துபோய் விடுவார்கள். ஒற்றையாட்சி அமுலில் இருக்கும் நாடுகளில் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை நசுக்குவதற்கு உதாரணங்கள் பல உள.

தென்னிலங்கையில் தான் விமோசனம் உண்டு என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள், சிங்கள நாட்டுப் பொருளாதாரம் அவர்களுக்குமட்டுமே உரியது.

இலங்கையின் எதிர்காலப் பொருளாதார முன்னேற்றம் வரண்ட பிரதேசங்களில்தான் உண்டு என்று சமீபகாலத்தில் ஆராய்ச்சி நடத்திய அகில உலக வங்கி நிபுணர் கோஷ்டியினர் தெரிவித்துள்ளனர். வரண்ட பிரதேசத்தின் பெரும்பகுதி தமிழ்ப் பிரதேசங்களை உள்ளடக்கியது. எனவே தமிழரின் பொருளாதார வளத்தையிட்டு அஞ்சவேண்டியதில்லை.

தமிழ்க் காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனம் பிரயோசனமற்றது. மண்ணைக்கொண்டு அவர்கள் மாளிகை கட்ட முனைவந்துள்ளனர். இவர்களுடைய இந்த எண்ணம் ஒருபோதும் நிறைவேறப்போவதில்லை....—1956-ம் ஆண்டு 'சிங்களம் மட்டும் சட்டத்தை தமிழர்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள்' என்று கூறிய திரு. பொன்னம்பலம், சிங்களச் சட்டத்தை ஏற்கச் செய்வது தமிழ்த் தலைவர்களின் கடமையாகும் எனவும் குறிப்பிட்டார். இதனை அவர் மறுக்க முடியாது.

எந்த சிங்களக்கட்சியும் தமிழர்களுக்கு இன்று சம அந்தஸ்து தரத் தயாராகவில்லை, இந்த நிலையில் திரு. பொன்னம்பலம் எவ்வாறு சம அந்தஸ்து தரமுடியும்.

எமக்கென ஒரு நாடும் மொழியும் உண்டு. எமது நாட்டை ஆள எமக்கு உரிமை உண்டு. எதிர்வரும் பொதுத் தேர்தல் தமிழர்களின் புதிய போராட்டத்திற்கானது. தமிழர்கள் சுயநிர்ணயத்திற்காகப் போராட்டத்தை ஆரம்பிக்க நமக்கு மக்களின் ஆதரவும் வேண்டும்.

எமது தமிழ்நாட்டில்தமிழரசை நிறுவவேண்டுமானால் அதற்கு நாம், பாடுபடவேண்டும். நாம் நமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராட்டம் நடத்துவது பற்றி அறிவித்ததும் மக்கள் போராட்டத்திற்கு ஆயத்தமாகவேண்டும். இருபது தொகுதிகளில் நாம் போட்டியிடுகின்றோம், 20 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற்றால் தான் அது நமக்கு வெற்றி. ஓரிடத்தில் தோல்வியுற்றாலும் அது தோல்வியே. இவ்வாறான நிலை ஏற்பட்டால் நாம் எவ்வாறு சுயநிர்ணய உரிமை பெற முடியும்.

கோப்பாய் தொகுதி தமிழரசுக்கட்சி அபேட்சகர் நியாயவாதி திரு. சி. கதிரவேற்பிள்ளை பேசியதாவது:-

சைவசமயம் மற்றச் சமயங்களையும் ஏற்று நடத்தும் கொள்கையை சமய உண்மையிலிருந்து தெளிந்து அறிந்தது. ஆகவே சமயத் துறையிலேயே மதத்துவேஷத்திற்கு இடமில்லை: இது இவ்வாறிருக்க அரசியல்துறையிலே மதத்துவேஷத்தையும் வேற்றுமையையும் தூண்டுவது மிகப் பாதகமான கீழ்த்தரமான பிரசாரமாகும். இப்பிரசாரம் சைவசமயத்திற்குச் செய்யும் துரோகமாக இருக்கிறது. தமிழ்பேசும மக்களுக்கு எந்தச் சமயத்தையும் பிற்பற்றும் உரிமையுண்டு இதனை மறுத்து அரசியலிலே அதுவும் தேர்தல் பிரசாரத்தில் சமயத்துவேஷத்தைப் புகுத்துவது இனத்திற்கும் சமய வாழ்விற்கும ஒரு சிலர் செய்யும் பெருந்துரோகமாகும்.

சைவமக்கள் இந்த மதத்துவேஷ பிரசாரத்தை விலக்கி உண்மையான சைவப்பண்பிலே தொடர்ந்து வளர்வார்கள் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை.

மற்றும பலரும் பேசினர்.

"மூன்று விஷயங்களில் நான் ஒத்துழைக்கவில்லை"

கோப்பாய் முன்னாள் எம். பீ. விளக்கம்

வசாவிளான், திங்கள்

தமிழரசுக்கட்சியினரின் மூன்று கோரிக்கைகளுக்கும் நான் ஒத்துழைக்கவில்லை. நான்ஒத்துழைக்காததற்கு பல காரணங்கள் உண்டு. மக்கள் பிரதிநிதிகள் சபையில் இருந்து பதவி துறக்கும் பிரேரணை வந்திருந்தபோது அவ்விடயத்தை நான் முழுமனதுடன் எதிர்த்தேன். தனிச் சிங்களச் சட்டம் மூன்றிலிரண்டு வாக்குகளால் நிறைவேற்றப்படவில்லை மேலும் சிறுபான்மையினரின் அடிப்படைச்சட்டத்தை மாற்றுவதற்கு அரசினர் திட்டமிட்டார்கள். அதே நேரத்தில் நாம் மக்கள் பிரதிநிதிகள் சபையில் இருந்து விலகுவதினால் எதிர்க்கட்சிக்கு 16 வாக்குகள் குறைந்தும், அரசினருக்கு 16 வாக்குகள் கூடியும் இருக்கும். இந்தக் காரணத்தினால் அரசினர்கள் தாங்கள் இயன்ற சட்டங்களை பாரபட்சமாக இயற்றுவார்கள், பதவியைத் துறந்திருந்தால் இன்று அரசாங்கத்தை தோற்கடித்திருக்க முடியாது, அத்துடன் தற்போது தேர்தலும் நடைபெற முடியாது. இவ்விடயத்தில் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் எனது கருத்தை மனப்பூர்வமாக ஏற்று செயல்பட்டமையினால் இன்று தேர்தல் நடைபெறுகின்றது" என்று கோப்பாய் முன்னாள் எம். பீ. திரு. மு. பாலசுந்தரம் புன்னாலைக்கட்டுவனில் திரு. நல்லையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் குறிப்பிட்டார்.

திரு பாலசுந்தரம் மேலும் குறிப்பிட்டதாவது:-

(5-ம் பக்கம் பார்க்க)

மக்களின் தேவையை உணர்ந்து செயலாற்ற முன்வர வேண்டும்

உப்பள அலுவலகதிறப்பு விழாவில் உப்பு கமிஷனர் கருத்து

சுழிபுரம், திங்கள்

"அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து உப்பு இறக்குமதி செய்யும் நேரத்தில் எம்மால் எமது தேவையை பூர்த்தி செய்ய முடியும் என்ற துணிவுடன் உங்கள் பிரதேசத்தில் உப்புஉற்பத்தியை ஆரம்பிக்க முற்பட்டது மிகவும் பாராட்டத்தக்கதாகும். மக்களின் தேவை எதுவோ அதை செயலாக்கும் வேலையில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முன்னிற்பதை வலிகாமம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தினரின் வேலைத்திட்டத்தில் இருந்து காணமுடிகின்றது" என்று வலிகாமம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினரால் கல்லுண்டாயில் ஆரம்பிக்கப்பட்ட உப்பள புதிய அலுவலகத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் உப்பு கமிஷனர் திரு. சி. அமிர்தநாயகம் குறிப்பிட்டார்.

"உப்புவிளைவிக்கும் தொழில் மிகவும் பழையதாகும். பழையது என நாம் எதையும் தள்ளிவைக்கமுடியாது. பழையவற்றில் இருந்து நாம் பெற வேண்டியது அநேகம் இருக்கின்றன. நாம் எடுத்த காரியத்தில் எவ்வித தடைகள் வந்தாலும் மனம் தளராது தொடர்ந்து அவற்றைப் பெற முயலவேண்டும். அரசாங்கத்தின் உதவிகளை பெற்று இலங்கையில் முதன்மையான உப்பளமாக விளங்குவதற்கும் குறிப்பாக இப்பகுதி மக்களின் சுய தேவையைப் பூர்த்திசெய்வதற்கும் சமாசத்தினர் உழைக்கவேண்டும்" என்றும் அவர் கூறினார்.

திரு. எம். ஆறுமுகம் பேசுகையில், பெரிய முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்லுண்டாய் உப்பளம் சகல வகையிலும் முன்னேற அரசாங்கத்தின் உதவி தேவை என்றும் கூறினார்.

கூட்டுறவு ஆணையாளர் திரு. எஸ். பொன்னுத்துரை பேசுகையில், இப்பகுதி மக்களின் வேலையில்லாத்திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு இது போன்ற பல திட்டங்களை ஏறவேண்டுமென்றும் இங்கு எடுக்கப்படும் உப்பை தகுந்த விலைகொடுத்து வாங்கக்கூடிய வகையில் அரசாங்கம் உதவ வேண்டுமென்றும் பிறநாட்டுக்கு உப்பு அனுப்பக்கூடியமுறையில் உப்பை உற்பத்திசெய்யவேண்டும் என்றும் கூறினார்.

கூட்டுறவு வங்கி காரியதரிசி திரு. இராசசேகரன் பேசுகையில், நல்ல பயனுள்ள பெரும் திட்டங்களுக்கு கடன் கொடுக்க வேண்டியது கூட்டுறவு வங்கியின் கடமையாகும் என்று கூறினார். அலுவலகத் திறப்பு விழா வைபவத்துக்கு சமாசத் தலைவர் திரு. ஏ. சி. வேதாபரணம் தலைமை வகித்தார்.

ஒரு பிரபலமான
டுப்பிளிகேட்டறின்
பிரபலமான மொடல்
சகாயமானவிலைக்கு உண்டு

REX-ROTARY

M2

எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக் கூடிய வகையிற் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினால், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை மாற்றுப் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மாற்றிய இன்னும் அதிகம் கூறலாம். உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

ஒல்லண்ட் சட்டிடம்,
கொழும்பு -3

தொலைபேசி: 6168
தந்தி: ஆபீஸ் எயிட்ஸ்

நீதிமந்திரியை வரவேற்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ்.

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பொதுநிர்வாகசபைக் கூட்டம் சேணியதெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் மகாசபைத் தலைவர் திரு எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றபோது சமீபத்தில் யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்யவிருக்கும் நீதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவுக்கு அமோகமான வரவேற்பு அளிப்பதென்றும் சிறுபான்மைத் தமிழ்மக்களுக்கு இருக்கும் பிரச்சினைகளை அவருக்கு ஒரு மகஜர்மூலம் சமர்ப்பிப்பதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நீதிமந்திரியை வரவேற்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கு வரவேற்புக்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

"சமஷ்டிக்குப் பதில் பிரதேசசுயாட்சி"

யாழ்ப்பாணம், செவ்.

'தமிழ் பேசும் மக்களுக்கு சமஷ்டி பெற்றுத்தருவோம் என்று கூறிச் சென்றவர்கள் இன்று தமிழ் மக்களுக்கு பிரதேச சுயாட்சி பெற்றால் போதும் என்ற கட்டத்திற்கு வந்து தமது புதிய தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஅந்தஸ்து என்று மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள்.' என்று வழக்கறிஞர் திரு. எஸ். எஸ் ஸ்ரீதரன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடும் திரு ஜி. ஜி. பொன்னம்பலத்தை ஆதரித்து 18-ம் வட்டார வாக்காளரால் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரசாரக கூட்டம் மனோகராமைதானத்தில் திரு. எஸ். நடராசா தலைமையில் நடைபெற்றது.

திரு ஸ்ரீதரன் தொடர்ந்து பேசியதாவது:

அரசியல் ரீதியாக தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர்களினால் கேட்கப்பட்ட பதில்களுக்கு இதுவரையும் பதில் இல்லை பதிலாக தமிழ்க்காங்கிரஸ் அபேட்டகர்கள் மீது இல்லாதவற்றைக் கூறி மக்களை தவறான பாதையில் இட்டுச் செல்கிறார்கள்.

மட்டக்களப்பிலிருந்து தமிழ் காங்கிரஸ் மீது சுமத்தப்பட்ட விருக்களுக்குவிடையளித்திருக்கின்றோம். இன்னும்சந்தேகமிருப்பின் அவற்றிற்கான பதிலை இவ்வார இறுதியில் அச்சு செல்லும் போது வெளியிடத் தயங்கமாட்டோம்.

திரு ஜி ஜி. பொன்னம்பலம் பேசுகையில் குறிப்பிட்டதாவது,

சமஷ்டிக் கட்சித் தலைவர் திரு எஸ். ஜே வி. செல்வநாயகம் என்னுடன் சேர்ந்து பிரஜா உரிமைச் சட்டத்திற்கு எதிராக வாக்களித்திருக்கிறார் இதனை அவர் மறுக்க முடியாது. தமிழ் பேசும் மக்கள் சம அந்தஸ்துடன் இலங்கையடங்கிலும் வாழ வேண்டும் எனத் தமிழ்க்காங்கிரஸ் போராடி வந்துள்ளது.

மற்றும் பலரும் பேசினர்.

ஸ்ரீ மனோகரா (யாழ்ப்பாணம் போன்; 485)
ஹொன்னப்பா பாகவதர்
பி. சரோஜாதேவி
திறம்பட நடித்த
மஹாகவி காளிதாஸ்

REGAL — JAFFNA
NOW SHOWING
ROBERT HOSSEIN
in
VICE AND VIRTUE
Adults Only
(Cinemascope)

"முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து போராடவேண்டும்"

தமிழ் மக்கள் உரிமை பெற மெரில் பெர்னன்டோ கூறும் வழி

குரும்பசிட்டி, திங்கள்

"எதிர்வரும் பொதுத்தேர்தலில் யு. என். பி. கட்சியோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ அரசாங்கம் அமைத்துக்கொண்டபோதிலும் நாட்டிலுள்ள தேசிய சிறுபான்மை இனத்தவர்களினதும், தொழிலாள விவசாயிகளினதும் சாதாரணப் பொதுமக்களது பிரச்சினைகள் எதுவும் தீரப்போவதில்லை. இப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு வடபகுதி தமிழ்மக்களும் தென்னிலங்கை முற்போக்கு சக்திகளும் தோட்டத்தொழிலாளர்களும் அணி திரண்டு ஒன்றுசேர்ந்து நடாத்தும் போராட்டங்களினால் மட்டும் முடியும். இப்போராட்டத்தினை நடாத்தும் சக்தி புரட்சிவாத சமசமாஜகட்சியிடம் உண்டு."

இவ்வாறு மொறட்டுவைத் தொகுதி முன்னாள் எம். பி. திரு மெரில் பெர்னன்டோ காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிடும் புரட்சிவாத சமசமாஜ அபேட்சகர் திரு வை. காராளசிங்கத்தை ஆதரித்து பலாலி கைப்பந்தாட்ட மைதானத்தில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

திரு வி. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. மெரில் பெர்னன்டோ மேலும் பேசியதாவது:

யு. என். பி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிகள் இரண்டும் முதலாளித்துவ கட்சிகளே. நாட்டில் கடந்த 17 வருடங்களாக நடைபெற்றுவரும் பாராளுமன்ற காலத்தில் சாதாரண பொதுமக்களின் நிலை வரவர மோசமடைந்துகொண்டே போகிறது. யு. என் பி. யின் 5 வருட ஆட்சியில் மக்களின் வாழ்க்கைச் செலவு, வேலையில்லாப் பிரச்சினை, வீட்டுப்பிரச்சினை, வீட்டு வாடகைச்செலவு ஆகியன உயர்ந்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் இரண்டு அரசாங்கங்கள் காலத்தில் மேலும் இவை அதிகரித்தன, 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் டாக்டர் என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா போன்ற எமது கட்சி நண்பர்கள் ஸ்ரீமாவோவின் அரசாங்கத்தில் சேர்ந்துகொண்டனர். தொழிலாளர்கள், விவசாயிகள், சிறுபான்மை இனத்தவர்கள் ஆகியோரின் நன்மை கருதி தாங்கள் கொண்டிருந்த கொள்கைகளை காற்றில் பறக்கவிட்டனர். இக்கூட்டணிமூலம் மக்கள் காட்டிக்கொடுக்கப்பட்டனர். தற்போது இவர்கள் கூட்டுஅரசாங்கம் பதவிக்கு வரவேண்டும் எனச் சொல்லிப் பிரசாரம் செய்கின்றனர். அத்தியாவசியப்பொருட்களின் விலைகள் விஷம்போல் ஸ்ரீமாவோவின் கூட்டுஅரசாங்க காலத்தில் ஏறுகின்றது. நமதுநாட்டு சுயதேவைகளை நாமே பூர்த்திசெய்துகொள்வதற்கு அரசாங்கம் உதவி அளிக்கவில்லை. அரசாங்கத்தின தொழிற்கொள்கை திறமையாக இல்லை, பதுக்கல்காரரின் கொள்ளை மோசடிகளை அரசாங்கம் தடுப்பதில்லை இவர்களுக்கு மேலும் உதவியளிப்பதில்தான் கூட்டரசாங்கம் கவனம்செலுத்துகிறது. தொழிலாளர்களுக்கு சரியான சம்பளம் முதலாளிகளினால் வழங்கப்படுவதில்லை சோஷலிச முற்போக்காளர்களான தொழிலாளர்களை நசுக்கி முதலாளித்துவத்தைக் காப்பதில் கூட்டுஅரசாங்கம் முயல்கிறது.

கூட்டுஅரசாங்கம் பதவிக்கு வந்தபோது வாழ்க்கைச் செலவு குறைக்கப்படும், கறுப்புசந்தை வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டபோதிலும் 6 மாதங்களாகியும் ஒரு சட்டமும் கொண்டுவரப்படவில்லை. முதலாளிகளிடமிருந்து பணம் பறிக்கப்பட்டு தேசியபொருளாதார அபிவிருத்திக்கு பாவிக்கப்படுமெனச் சொல்

(5-ம் பக்கம் பார்க்க)

2-வது மாதம்

கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
வெம்பிளி (கண்டி)
தினசரி 6-30, 9-30,



ஜெமினி கணேசன்
சாவித்திரி
மற்றும் பலர் நடிக்கும்
கற்பகம்

வட இலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள் 2-ம் பகுதி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம், வட இலங்கைச் சங்கீதசபையின் 1964-ம் வருடப் பரீட்சை முடிவுகளின் இரண்டாம் பகுதி விபரம் கீழே கொடுக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம்

இரண்டாம் பகுதி

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

பவளராணி நல்லதம்பி, ஆனந்தகுமாரி சின்னத்தம்பி, சகுலேஸ்வரி சின்னத்துரை, கணகேஸ்வரி ஆறுமுகம், சிவயோகி சபாரத்தினம், ராஜேஸ்வரி நடராசா, தவரஞ்சினி சின்னத்துரை, உமாதேவி தணிகாசலம், முத்துமணி கணபதிப்பிள்ளை, ஜெயந்தி நவரத்தினம், நித்தியலட்சுமிதேவி அழகரத்தினம், திலகராணி அழகரத்தினம், இரத்தினகாந்தி இராமநாதன், சாந்தி பாக்கியராசா, ரவிகாந்தி இராமநாதன், சித்தரஞ்சன் குமாரசாமி, இரத்தினேஸ்வரி தெய்வேந்திரம், செல்வராணி நடராசா, கலா ராசையா, உமா ராசையா, மகேஸ்வரி நாகலிங்கம், கலைவாணி கந்தையா, விஜயலட்சுமி சிவகுருநாதன், கலைரூபி இராசையா, ஞானரூபி இராசையா, சந்திரலேகா ஞானப்பிரகாசம், சந்தியலேகா ஞானப்பிரகாசம், வரதலெட்சுமி துரைராசா, துர்காதேவி பரமேஸ்வரம், ஐவான் ஜூலின் விமலாதேவி எட்வேட், சகுணா வேலுப்பிள்ளை, பிரேமாவதி வைரவநாதன், வசந்தகுமாரி குமாரசாமி, வேதநாயகம் இராமலிங்கம், அமிர்தரஞ்சிதம் முருகேசு, சித்திரலேகா குமாரதாசன், வரதலெட்சுமி பிரேமானந்தா, ஜெகந்தா இரத்தினசிங்கம், பிரேமளா ரங்கநாதன், வசந்தராணி சுப்பிரமணியம், விஜயலட்சுமி அழகரெத்தினம், செல்வமலர் அரியபுத்திரர், அனுசுயா தியாகராசா, கன்னியம்மா இராமலிங்கம்.

வயலின்

மங்களேஸ்வரி இராசரத்தினம், பத்மாதேவி தாமோதரம்பிள்ளை, இரத்தினேஸ்வரி கணபதிப்பிள்ளை, செல்வராணி தம்பிராசா, விமலராணி நடராசா, பூலசுமி சுப்பிரமணியம், ராஜினி ராசரத்தினம், இந்திரமலர் தெய்வேந்திரம், செல்லம்மா இராசரத்தினம், சின்னத்தங்கம் முருகேசு, புஷ்பகாந்தி கந்தையா, பேபி சரோஜினிசண்முகம், லீலாவதி சரவணமுத்து.

வீணை

ஜெயந்தி சண்முகரத்தினம், ஜெகசோதி தங்கவேல், புவனேஸ்வரிராசோகஷம், தேவிகாமலர் நாகரத்தினம், பாலசுசிலா தியாகராசா, நகுலேஸ்வரி பொன்னுத்துரை.

மூன்றாம்பகுதி

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

வசந்தராதேவி சின்னத்துரை, யோகசந்திரன் சதாசிவம், கனகம்பிகை சின்னத்துரை, ராஜேஸ்வரி ராசையா, ஜெயந்தி பாக்கியராசா, சாந்தகுமாரி திருச்செல்வம், கிரிஜகுமாரி குமாரசாமி.

வயலின்

சரோஜினிதேவி செல்லத்துரை, உத்திரதேவி பொன்னுத்துரை.

வீணை

சுந்தரேஸ்வரி ரகுப்பிள்ளை.

நான்காம் பகுதி

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

லங்காதேவி வைத்திலிங்கம், விமலாதேவி பஞ்சாநதேஸ்வரக் குருக்கள், செல்வராணிமலர் செல்லத்துரை, சரோஜினிதேவி இராசதுரை, கிருஷ்ணலீலாதேவி தம்பையா, நாகராஜா சின்னவர், குகதாம்பாள் குமாரசாமி, தங்கநாச்சி மயில்வாகனம், யசோதாதேவி குமாரசாமி, கருணை கந்தையா, உமாபூஷணம் இராமலிங்கம், சந்திரராணி கந்தையா, பாலகிருஷ்ணராசன் வைத்திலிங்கம், சந்திரலோஜனி சிவஞானம்.

வீணை

பாலசரஸ்வதி நவரத்தினம், யோகநாயகி சிவசுப்பிரமணியம்.

(தொடரும்)

யாழ். மேற்கு ஆசிரிய சங்க பேச்சு இசைப்போட்டி முடிவுகள்

சுழிபுரம், திங்கள்

யாழ்ப்பாணம் மேற்கு ஆசிரியர் சங்கத்தினரால் வலிமேற்கிலுள்ள ஆங்கில பாடசாலைகளுக்கிடையே பேச்சு, இசை போட்டிகள் நடாத்தப்பட்டது. போட்டிகள் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

ஆங்கிலப் பேச்சு

பெண்கள் கீழ்ப்பிரிவு

இ. ரஞ்சனி, இ. சாந்தகுமாரி, (யாழ்ப்பாணக் கல்லூரி); ந. சத்தியபாமா, (பண்டத்தரிப்பு மகளிர்)

மத்திய பிரிவு

இ. நவரஞ்சனி (யாழ்ப்பாணக் கல்லூரி); கெ. பராபரி, து. ஜெனராணி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி).

மேற்பிரிவு

செ. புஷ்பலக்ஷ்மி, இ. சாந்தினி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) எம். தவமணிதேவி (அரசினர் விக்ரோரியாக் கல்லூரி)

ஆண்கள் கீழ்ப்பிரிவு

கே. சைலசகுமார் (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி); கு. மயில்வாகனம் (யாழ்ப்பாணக் கல்லூரி); என். சந்திரமோகன் (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

மத்திய பிரிவு

ரி. மோகன் (யாழ்ப்பாணக் கல்லூரி); அ. சிறிகாந்தன் (அரசினர் விக்ரோரியாக் கல்லூரி); த. ரஞ்சிற் யாழ்ப்பாணக் கல்லூரி).

மேற்பிரிவு

இ. சௌந்தரம் (யாழ்ப்பாணக் கல்லூரி); வி. கனககந்தரம் (வட்டு இந்துக் கல்லூரி); எஸ். பத்மநாதன் (அரசினர் விக்ரோரியாக் கல்லூரி).

கூட்டுப் பாடல்

பெண்கள் மேற்பிரிவு

அரசினர் விக்ரோரியாக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி

கீழ்ப்பிரிவு

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, யாழ்டன் கல்லூரி காரைநகர், காரைநகர் இந்துக் கல்லூரி.

ஆண்கள்

காரைநகர் இந்துக் கல்லூரி,

தமிழ் பேச்சு

பெண்கள் மேற்பிரிவு

சி. யோகேஸ்வரி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), சி. சிவயோகநாயகி கா. கீர்த்திராணி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

மத்திய பிரிவு

மு. சகுந்தலா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி); என். உஷாதேவி (காரைநகர் இந்துக் கல்லூரி); இ. கிருபைரத்னம் (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி).

கீழ்ப்பிரிவு

இ. உமாராணி, இ. நிற்ரு (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி); பி. விக்னேஸ்வரி (காரைநகர் இந்துக் கல்லூரி).

ஆண்கள் மேற்பிரிவு

பி. பத்மநாதன் (அரசினர் விக்ரோரியாக் கல்லூரி); ந. பேரின்பநாயகம் (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி); பீ. கனகநாயகம் (வட்டு இந்துக் கல்லூரி).

மத்தியபிரிவு

பி. யோகேஸ்வரன் ந. சிறிகாந்தா (காரைநகர் இந்துக் கல்லூரி); ச. வயித்திலிங்கம் (அரசினர் விக்ரோரியாக் கல்லூரி).

கீழ்ப்பிரிவு

ச. சிவராஜா (வட்டு இந்துக் கல்லூரி); இ. கனகரத்னம் (யாழ்ப்பாணக் கல்லூரி); ச. கணேசமூர்த்தி (காரைநகர் இந்துக் கல்லூரி).

தனித்துப் பாடல்

ஆண்கள் கீழ்ப்பிரிவு

க. கந்தஞானி (வட்டு இந்துக் கல்லூரி); ச. பாலசுப்பிரமணியம் (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி); க. பிள்ளைநாயகம் (காரைநகர் இந்துக் கல்லூரி).

பெண்கள் கீழ்ப்பிரிவு

க. தேவமனோகரி (வட்டு இந்துக் கல்லூரி); அ. கனகநாயகி, க. பேபிசரோஜா (யாழ்ப்பாணக் கல்லூரி).

மேற்பிரிவு

ச. சிதம்பரேஸ்வரி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி); த. அரியமலர் (காரைநகர் இந்துக் கல்லூரி), க. செல்வராணி (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி).

"மூன்று . . .

(8-ம்பக்கத் தொடர்ச்சி)

பாதையாத்திரை விடயத்திலும் நான் ஒத்துழைக்கவில்லை. பாதயாத்திரையின் முதல் நோக்கம் தமிழ் பிரதேசத்திலிருக்கும் சிங்கள மக்களை அடியோடு பகிஷ்கரிக்க வேண்டும் என்பதாகும், அப்படி நாம் வட, கிழக்கு மாகாணத்தில் செய்தால் தென்னிலங்கையில் இருக்கும் தமிழ் பேசும் இனத்தினர் நிலைமை என்ன? 1958-ல் நடைபெற்ற இனக்கலவரத்திலும் பார்க்க மிகவும் மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கும். இதனால் தென்னிலங்கையில் இருக்கும் தமிழ் மக்கள் பொருட்களை இழந்து வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு வரவேண்டிவரும். அவர்கள் அப்படி வருவதினால் தமிழரசுக் கட்சியோ அல்லது அதன் அபேட்சகர்களோ ஒரு நாளைக்கு சாப்பாடு கொடுக்க முடியுமா?

பாதயாத்திரையின் இரண்டாவது நோக்கம் சிங்களம் படித்த தமிழ் மக்களை அடியோடு பகிஷ்கரித்து நடைப்பிணமாக்கவேண்டும் என்பதாகும், இவ்விஷயமாக நான் கட்சியின் நிர்வாகசபைக்கூட்டத்தில் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தேன். நாகநாதன் தமது மகனையும், மகளையும் பகிஷ்கரிப்பாரோ? உங்களின் உறவினர்களை முதலில் பகிஷ்காரம் செய்துவிட்டுத்தான் நாம் பொதுமக்களை பகிஷ்கரிக்கவேண்டும்;

திருவாளர்கள் பா. யோகசுந்தரம், காசிலிங்கம் ஆகியோரும் பேசினர்கள்.

முற்போக்கு சக்திகளுடன் . . .

(4-ம் பக்க தொடர்ச்சி)

விய நிதிமந்திரி என். எம். அமெரிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் உலகவங்கியில் பணம் கடன் கோரினர். இலங்கை முன்னேற்றமடைய திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்திமூலம்தான் முடியுமெனக் கூறிய இவர் மந்திரிப் பதவியேற்றபின்னர் ஏகாதிபத்தியவாதிகளிடம் சரண் புகுந்தார். தொழிலாளர்களினது வேலைநிறுத்தங்கள் நடந்தபோதெல்லாம் என். எம். கொல்வின் கோஷ்டியினர் பொலிசார், இராணுவம் ஆகியவற்றின்மூலம் அரசாங்கம் நடாத்திய தாக்குதல்களுக்கெல்லாம் ஒத்துழைப்புக் கொடுத்தனர். இதனால் தொழிலாள விவசாயிகளுக்கு பெருந்த துரோகமிழைத்தனர். இடதுசாரிக் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்டிருந்த கூட்டு முன்னணியை உடைத்தெறிந்து தொழிலாளர் கோரிக்கையான 21 கோரிக்கைகளை மறந்தனர். எனவே உண்மையாக சாதாரணப் பொதுமக்களுக்கு உழைக்கக்கூடிய தொழிலாளர்களின் தலைவர்களைத் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்து அவர்களின் குரலை நேரடியாக பிரதிபலிக்க செய்யவேண்டும்.

சமஷ்டிக் கட்சியினர் திட்டமிடப்படாத கொள்கையினாலும் இயக்கங்களினாலும் தமிழ் மக்களை தவறான பாதையில் கொண்டு செல்கின்றனர். வகுப்புவாதம் பேசுவதிலேயே தமது நேரத்தைக் கழிக்கின்றனர். தமிழ்க் காங்கிரஸ் வடபகுதியில் அசல் யூ. என். பி யாகும். இவர்களினால்

வித விமோசனமும் ஏற்படப் போவதில்லை. நாட்டிலே இன்று சிங்கள, பௌத்த இனவெறி தாண்டவமாடுகின்றது. இவைகளை முறியடித்து தமிழர்களின் ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க சோஷலிச முற்போக்கு கட்சிகளினால் மாத்திரம் முடியும். சமஷ்டிக்கட்சி ஒடுக்கப்பட்ட மக்கள் பக்கமில்லை. அவர்கள் ஒடுக்குவோர் பக்கம்தான் சேருகின்றனர். எனவே தமிழ் பகுதிகளிலிருந்து சோஷலிச முற்போக்கு எண்ணம்கொண்டவர்கள் தெரிவுசெய்யப்பட்டால் எம்மத்தியில் வாழும் தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் ஒன்றுசேர்ந்து மக்களின விடுதலைக்கு போராட உதவியளிக்கலாம்.

திரு. வி. காராளசிங்கம் பேசுகையில் கூறியதாவது:

"தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் மாகாணரீதியாக இயங்குவதால், தமிழர்களை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள் எதையும் சுமுகமாகத் தீர்க்கமுடியாது. சிங்கள மக்களிடையே எதிர்ப்புணர்ச்சியை வளர்த்து, தமிழ் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்பது சுலபமான காரியமல்ல.

தமிழர்களை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளை புரட்சிவாத சமசமாஜ கட்சியினால் மட்டுமே சுமுகமாகத் தீர்க்க முடியும்.

சிங்களத் தொழிலாளர்களுடனும், விவசாயிகளுடனும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்கள் கூட்டுச் சேரவேண்டும். அவர்களுடன் கூட்டுச்சேர்ந்து ஒத்துழைத்து சமதர்ம ஆட்சி ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமே இந்த நாட்டில் எல்லா மக்களும் சமத்துவமாக, சுதந்திரமாக வாழமுடியும்.

யாழ்ப்பாணத்தில், மாநகரசபை நிர்வாகத்தை மற்றும் நகர அமைப்புக்களைச் செய்வதற்கு தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சிகளினால் முடியும். ஆனால் நாட்டின் பிரச்சினைகளை, குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க இக்கட்சிகளினால் ஒருபோதும் முடியாதென்பதை மக்கள் நன்கு உணரவேண்டும்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர், தமிழ் மக்களை ஏமாற்றித் திரிகின்றனர். தமிழரசுக் கட்சியினர், தமிழ் மக்களை தவறான வழியில் கொண்டு செல்கின்றனர். இவர்களால் தமிழ் மக்களுக்கு என்றும் விடிவு காலம் ஏற்படாது.

புரட்சி மனப்பான்மை கொண்ட, சிங்கள சமூகத்தினரும், தமிழ் தோட்டத்தொழிலாளர்களும் மற்றும் புரட்சி எண்ணம் கொண்டவர்களும் ஒன்று சேர்ந்து புதிய இலங்கையை அமைக்க முன் வரவேண்டும். எதிர் வரும் தேர்தலில் மக்கள் இதனைக் கருத்திற் கொண்டு நிதானமாக வாக்களிக்கவேண்டும்

கூட்டத்தில் மற்றும் பலரும் பேசினர்.

செயற்கைக் கிரகம்

மாஸ்கோ, மார்ச். 8

'கொஸ்மோஸ்' தொடரில் மற்றுமொரு ஆளில்லாத செயற்கைக்கிரகமொன்றை நேற்று சோவியத்யூனியன் வான-வெளிக்கு அனுப்பியது. வானவெளி ஆராய்ச்சிச் சாதனங்கள் இதில் பொருத்தப்பட்டுள்ளன.

வரி விளம்பரம்

ஆங்கில வகுப்பு

மாணவ, மாணவிகளே! ஆங்கிலம் கற்கவிரும்புகிறீர்களா? யாழ்ப்பாணம் ஸ்ரீநாகவிகாரை சிங்கள பாடசாலையில் தினசரி பிற்பகல் 4 மணி தொடக்கம் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. 1771

விற்பனைக்கு

எங்கள் தயாரிப்பிலுள்ள "டோச்" மார்க் அலுமினியம் பாத்திரங்கள் குறைந்த விலையில் எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.

2 எவர்சில்வர் மாளிகை
41, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 1748

12-ம் நம்பர் ஸ்ரீவின்ஸ் துப்பாக்கி விற்பனைக்குண்டு. லைசென்ஸ் உள்ளவர்களுக்கு விற்கப்படும். வி. தாமோதரம்பிள்ளை, ஏழாலை, சுன்னாகம். 1770

தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியல் பிரமுகர்கள் [illegible] சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். தொய்வுக்கு 10 நாள் மருந்து. 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு அல்லது வாடகைக்கு

46-ம் இல, 1-வது ஒழுங்கை பலாலி றோட்டில் முற்றிலும் பல நவீன வசதிகளையுடைய புதிய மாடிவீடு. விபரங்களுக்கு:- 16 ஏ, அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1769

அங்கத்தவர்கள் தேவை

தீவுப்பகுதி ஐக்கிய வைத்தியசாலைச் சங்கம், சுரம்பொன், ஊர்காவற்றுறை. அங்கத்தவராய்ச் சேர்ந்துவிட்டீர்களா? பங்குகள் விநியோகிக்கப்படுகின்றன. செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். 1772

தென்பிராந்திய மொழி

ஜெய்பூர் மார்ச். 8

ஜோத்பூர் பலகலைக்கழகத்தில் தென் பிராந்திய மொழிகள் போதனைக்கான பிரிவு ஒன்று அமைக்கப்பட விருக்கிறது.

வானொலி நிகழ்ச்சிகள்

செவ்வாய் 9-3-65

கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-44 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

பகல் 12-00 திரைகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஸ்ரீலங்கா குறுக்கெழுத்துப்போட்டி, 7-00 வயலின் வி. கே. குமாரசாமி, 7-30 விவேகச்சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம், 9-45 நாகசுரம்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

'கேரளத்தில் மார்க்ஸிய அரசாங்கம்'

நம்பூதிரி பாத் நம்பிக்கை

திருவனந்தபுரம், மார்ச் 7
கேரள சட்டசபைத் தேர்தலில் அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ள மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. நம்பூதிரிபாத் கேரள கவர்னர் திரு. கிரியை இன்று சந்தித்தார். இதன் பின்னர் அவர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் கேரளத்தில் மார்க்ஸிய அரசாங்கம் ஒன்றை அமைக்குந் தகுதி தமது கட்சிக்கு உண்டெனத் தெரிவித்தார்.

இதுபற்றித் தாம் கவர்னரிடம் எடுத்துக்கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுவீடன் மகாராணி காலமானார்

லண்டன், மார்ச் 7
சுவீடன் மகாராணி லூசி இன்று தமது 75வது வயதில் காலமானார். இவரது மரணம் குறித்துப் பல நாடுகளிலிருந்தும் அனுதாபச் செய்திகள் மன்னருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மலேஸியாவுக்கு அமெரிக்க உதவி

வாஷிங்டன், மார்ச் 7
மலேஸியாவுக்கு அமெரிக்கா 40 லட்சம் டாலர் பாதுகாப்பு உதவியாக வழங்கியுள்ளது. இதனை மலேஸிய அரசாங்கம் ஏற்றுப் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

"தமிழினத்தின் இன்றைய நிலை"

திரு. வி. என். பேச்சு

சாவகச்சேரி, திங்கள்
"இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழினம் மிகவும் அபாயமான நிலையில் இருக்கின்றது. இந்த நிலைமையை தீர்த்து தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப்பெற்றுத்தரும் வல்லமையுள்ள கட்சி எது என்று தமிழ்மக்கள் சிந்தித்துச் செயலாற்றவேண்டும்" என்று கெற்பெலி கனவாய்க்குள முன்றலில் நடைபெற்ற தமிழரசுக்கட்சித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசுகையில் சாவகச்சேரித் தொகுதி தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு. வ. ந. நவரத்தினம் கூறினார். திரு. தில்லையம்பலம் தம்பிஐயாவின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில், தமிழ் மக்கள் தங்கள் இழந்த உரிமைகளை தங்களின் ஒன்று சேர்ந்த ஒன்றுபட்ட சக்தியுடன் போராட்டம் மூலமே பெற்றுக்கொள்ள முடியும் என்றும் ஆளும்கட்சியோடு ஒத்தாசை புரிந்து எமது உரிமைகளைப் பெற்று விட முடியாது என்றும் கூறினர்.

வழக்கறிஞர் மூ. ஆலாலசுந்தரம், திரு. வி. வி. சக்தையா சாவையூர் முதலியவர் உட்பட வேறு பலரும் பேசினர்.

மாபெரும் கூட்டங்கள்
ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர்
திரு. நா. த. சிவஞானம்
அவர்களை ஆதரித்து
இன்று
9-3-65 மாலை 6 மணிக்கு
புங்குடுதீவு கிழக்கிலும்
8-30 மணிக்கு
புங்குடுதீவு மேற்கிலும்
நடைபெறும்.
ஜி. ஜி. பொன்னம்பலம்
பிரதான பேச்சாளராக
பங்குபற்றுவார்.

ஆயுள்வேத வைத்தியம்

உடுப்பிட்டி, திங்கள்
"பண்டைத்தமிழர்கள் ஆயுள்வேத வைத்திய முறையைச் சிறப்பாகக் கையாண்டார்கள். ஆங்கில வைத்தியத்திற்குப் பொதுமக்கள் எவ்வளவு ஆதரவு கொடுக்கிறார்களோ அதே ஆதரவைத் தமிழ் வைத்திய முறைகளுக்கும் கொடுக்கவேண்டும். ஆயுள்வேதவைத்தியம் உடனடியான குணத்தை ஏற்படுத்தாவிட்டாலும் நாளடைவில் பூரண குணத்தை ஏற்படுத்தக்கூடியது."

இவ்வாறு நவிண்டில் உபதபாற்கந்தோருக்கண்மையில் உடுப்பிட்டி கிராமசபையின் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையைத் திறந்துவைத்த உடுப்பிட்டி கிராமசபைத்தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் பேசுகையில் கூறினார்.

பருத்தித்துறை தொகுதி ஐக்கியஇடதுசாரி அபேட்சகர் திரு. கே. மோதிலால் நேரு பேசுகையில்; நாவின்லையில் காலஞ்சென்ற பாரதப் பிரதமர் திரு. ஜவகர்லால்நேரு திறந்துவைத்த ஆயுள்வேத ஆராய்ச்சிசாலையில் போதிய மருந்துவகைகள் தயாரிக்கப்படுகின்றன என்றும், எனவே ஆயுள்வேத வைத்தியத்திற்கு மருந்துகள் இல்லையென்ற குறை இனிமேல் இருக்காது என்றும் கூறினர்.

கிராமசபை அங்கத்தவர் உட்பட பலர் பேசினர்.

விளையாட்டுப் போட்டிகள் பின்போடப்பட்டன

வவனியா, திங்கள்
வவனியா, மன்னார் மாவட்டங்களில் இந்தத் தவணையில் நடைபெறவிருந்த பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் அடுத்த தவணைக்குப் பின்போடப்பட்டுள்ளது.

இந்த மாவட்டம் புயலால் பாதிக்கப்பட்டு நிலைமை இன்னமும் சீரடையாததன் காரணமாகவே அடுத்த தவணை வரை இவ் விளையாட்டுப் போட்டிகள் பின்போடப்பட்டதாக வவனியா-மன்னார் மாவட்ட வித்தியாதரிசி அறிவித்துள்ளார்.

"[illegible]த்துக்கு..."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்து, உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து அத்துறைகளில் மக்கள் விரும்பி ஈடுபட வழிவகை செய்தல் வேண்டும்.

சகல இனத்தவர்களின் மதம், பண்பாடு முதலியவைகளைப் பாதுகாத்துப் போற்றி வளர்க்கவேண்டும். [illegible] என்ற உண்மை அடிப்படையிலேயே மனித வாழ்க்கை மலரவேண்டும். தொழில் முன்னேற்றத்திற்குத் திட்டமிடுவோர் இனத்துவேஷ அடிப்படையில் திட்டமிடாது நாட்டின் முன்னேற்றம் ஒன்றையே கருத்திற்திட்டமிடச் செய்தால், எம் சமூகத்துக்கு அதிகம் நன்மை உண்டாகும்.

சுதந்திர சோஷலிஸ்ட் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

பம்பலப்பிட்டி, திங்கள்
லஞ்ச ஊழல்களை தடுப்பதற்கும் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் தில்லுமுல்லுகளை விசாரணை செய்யவும் ஒரு கமிஷனை நியமிப்போம் என்று சிறிலங்கா சுதந்திரசோஷலிஸ்ட் கட்சி தயாரித்து விடுத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையை ஒரு குடியரசாக்கவும்—பௌத்த சாசனத்தை முன்னேற்ற பாதையில் கொண்டுசெல்லவும் முயல்வோம். சிங்கள மன்னர்கள் ஆண்டமுறைப்படி அரசாங்க விஷயங்களையும் பிற விஷயங்களையும் கவனிப்போம். அத்துடன் நாலு போயா நாட்களையும் பௌத்தர்களுக்கு அரசாங்க — வர்த்தக விடுதலை நாட்களாக்குவோம்.

உத்தியோக மொழியான சிங்களத்தைத் திறமையான முறையில் அமுலாக்கவும் அதனை கொண்டு நடத்தவும் வேண்டிய நடவடிக்கைகள் எடுப்போம். காலஞ்சென்ற பண்டாரநாயகாவினால் கூறப்பட்டபடி தமிழ் பேசும் மக்களுக்கு ஒருவித கஷ்டமுமின்றி அவர்களது விஷயங்களைத் தமிழில் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்போம்.

வானொலி நிலையத்தை ஒரு கூட்டுஸ்தாபன முறையில நடத்த நடவடிக்கைகள் எடுப்போம். அத்துடன் இந்தியப் பிரச்சினையையும் இந்நாட்டில் உள்ள மக்களை பெரிதும் பாதியாத முறையில் தீர்க்கமுயல்வோம்.

ஆசிரியர்களுக்கு புதிய திட்டம்

பம்பலப்பிட்டி, திங்கள்
தமிழ்-சிங்கள ஆசிரியர்களுக்கு பதவி உயர்ச்சி கிடைக்கும் வகையில் ஒருவித திட்டத்தை கல்விப்பகுதி இலாகா அண்மையில் தயாரித்துள்ளதாகத் தெரியவருகிறது. இத்திட்டம் அநேகமாக இந்த மாதம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமெனவும் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர் பதவிக்கு உயர்ச்சி கொடுக்கப்படுவார்களென்றும் கூறப்படுகிறது.

கைத்தறி சேலைகள்
80, 100, 120-ம் நம்பர் நூல்களில் எமது சொந்தத் தறிகளால் தேர்ச்சிபெற்றவர்களைக்கொண்டு டிசைன்கள் போட்டு தயார் செய்த சேலைகள் மலிவான விலைகளில் விற்பனைக்கிருக்கின்றன.
எஸ். ஆர். செல்லத்துரை
216, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 296.

யாழ். குடிவகை ஸ்தாபனத்தாரின் மகத்தான
வெ... யீடு
விற்பனையாகிறது
அடைத்த போத்தல்
யாழ். தென்னங்கள்
உடலுக்கு உறுதியும்
மூளைக்கு நல்லுணர்வும்
தேக ஆரோக்கியத்திற்கும்
உகந்தது
அடைத்த போத்தல்
யாழ். தென்னங்கள்
சுப்பையா அன் கம்பெனி
(மேலைநாட்டுக் குடிவகை ஸ்தாபனம்)
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
வட்டுவாகல், முல்லைத்தீவு

அருத எண்ணெய்
(அறுபதாம் பச்சையும்
வேறு 44 அரிய மூலிகைகளும் சேர்ந்தது)
கூந்தலை அடர்த்தியாகவும் நீளமாகவும் வளர்க்கும்.
தலைமயிர் உதிர்வதையும், நரைப்பதையும் தடுக்கும்.
பீனிசத்தை முற்றாக குணப்படுத்தும்.
மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்களுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். கண் எரிச்சல், காது இரைச்சல், காதில் சீழ் வடிதல், அடிக்கடி ஜலதோஷம் பிடித்தல், தும்மல், தலையிடி ஆகிய நோய்களைக் குணப்படுத்தும்.
சிறுவர் முதல் பெரியோர் வரை பாவிக்கலாம்
முழுப்போத்தல் ரூபா 10-00 அரைப்போத்தல் ரூபா 5-00
கால் போத்தல் ரூபா 3-00 2 அவு. போத்தல் ரூபா 1-00
எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
தயாரிப்பாளர்:
வைத்தியர் பி. எம். திசாநாயக்க,
கம்பளை.
சாவகச்சேரியில் கிடைக்குமிடம்:
ஸ்ரீ முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்,
பஸ் ஸ்டாண்ட், சாவகச்சேரி.
யாழ்ப்பாணத்திற்கு ஏகவினியோகஸ்தர்கள்
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 541)

போன்: 7099
றொலறம்ஸ்
46,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
இருப்புஎடுக்கும்
மலிவு
விற்பனை
உயர்ந்த ரகம், உன்னத சேவை,
வேண்டிய தினுசுகளை
ஒரே முறையில் தேர்ந்து எடுக்க
ஒரே ஸ்தாபனம்
றொலறம்ஸ்

தினமும்
பாவியுங்கள்
MILK WHITE
SOAP
V.M.K.
K.K.S. ROAD, JAFFNA
மில்க்வைற்
மில்க்வைற்
நீல சோப்
தந்தி: மில்க்வைற்
ஸ்தாபிதம் 1927
போன்: 7233
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
727, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 9-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.